1 மாணவியர் அணி மேலாளர் கூட்டம் 27.01.2025 அன்று மாலை 6:00 மணிக்கும் மாணவர்களின் அணி மேலாளர் கூட்டம் 29.01.2025 அன்று மாலை 6:00 மணிக்கு போட்டி நடைபெறும் இடத்தில் நடைபெறும்.

2. மாணவியர்களுக்கு 27.01.2025 இரவு முதல் – 29.01.2025 மதியம் வரை உணவு வழங்கப்படும், மாணவர்களுக்கு29.01.2025 இரவு முதல் 31.01.2025 மதியம் வரை உணவு வழங்கப்படும்.

3. அனைத்து போட்டியாளர்களும் தங்கள் நுழைவுப்படிவத்தை (ENTRY FORM–HAND COPY) கண்டிப்பாக கொண்டுவர வேண்டும்.

4. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளரால் அனுமதி பெற்று வரும் உடற்கல்வி இயக்குனர் உடற்கல்வி ஆசிரியர் மட்டுமே அணி மேலாளராக பணியாற்ற அனுமதிக்கப்படுவர் பயிற்சியாளர்கள் போட்டியில் இடையூறு செய்தால் போட்டியாளர் கண்டிப்பாக உடனே போட்டியிலிருந்து நீக்கம் செய்யப்படுவர்.

5. மாணவிகள் 29.01.2025 இரவு எக்காரணம் கொண்டும் தங்க அனுமதி இல்லை ஏனெனில் மாணவர்கள் அதே இடத்தில் தங்க வேண்டிய சூழல் உள்ளது.

6. அணி மேலாளர்கள் மட்டுமே ஆட்சேபம் ஏற்பட்டால் மறுப்புக்கட்டணம் செலுத்தி ஆட்சேபனைக் கடிதம் தர தகுதி உடையவர். ஆட்சேபனை தெரிவிக்கும் போது ரூபாய் 1000/– பணம் கட்டுதல் அவசியம். போட்டி முடியும் முன் ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டும். முடிவு எவ்வாறாயினும் மறுப்பு கட்டணம் திருப்பி அளிக்கப்பட மாட்டாது.

7. போட்டியாளர்கள் தங்களுக்கான விளையாட்டு உபகரணங்களை தாங்களே கொண்டு வருதல் மிகவும் அவசியம். தகுந்த உபகரணம் இல்லாத போட்டியாளர் போட்டியில் பங்கு பெற அனுமதிக்க இயலாது.

8. தங்கள் மாவட்டத்திலிருந்து பங்குபெறும் மாணவிகளின் வருகையை 27.01.2025 அன்று மாலை 2 மணி முதல் இரவு 9 மணிக்குள் மற்றும் மாணவர்களின் வருகையை 29.01.2025 அன்று மாலை 2 மணி முதல் இரவு 9 மணிக்குள் தங்களது ஒதுக்கப்பட்டுள்ள தங்கும் இடங்களில் வருகை உறுதி செய்திட அணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்,

9. வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்குவதற்கு ஒதுக்கப்படும் இடத்திற்கு மாவட்டம் ஒன்றுக்கு ரூபாய் 1000 வீதம் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும். அத்தொகையை மாவட்ட அணிகள் வெளியேறும் போது பெற்றுக் கொள்ளலாம்.

10. வீரர் வீராங்கனைகள் தங்கும் இடத்தினை தூய்மையாக வைத்துக் கொள்வதுடன் எவ்வித சேதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சேதம் ஏற்படின் அணி மேலாளர்கள் முழு பொறுப்பேற்க வேண்டும்.

11. வீரர் வீராங்கனைகள் தங்குமிடத்தில் அணி மேலாளர்கள் கண்டிப்பாக தங்க வேண்டும். உணவு உண்ண அனுமதிக்கப்படும். அணி மேலாளர்கள் தவிர பிறநபர்கள் தங்க அனுமதி இல்லை.

12. மாணவியர்கள் போட்டி நடைபெறும் நாட்களில் பெண் ஆசிரியர்கள் மட்டுமே கண்டிப்பாக தங்கிட அனுமதிக்கப்படுவர்.

13. மாணவர்களுக்கான போட்டிகள் நடைபெறும் நாட்களில் ஆண் ஆசிரியர்கள் மட்டுமே கண்டிப்பாக தங்கிட அனுமதிக்கப்படுவார்கள்.

Scanned with OKEN Scanner

14. போட்டி நடைபெறும் காலம் குளிர்காலம் என்பதால் போர்வை உட்பட தங்குவதற்கு உரிய உடைமைகளையும் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களையும் தங்களுடன் கொண்டுவர அறிவுரை வழங்கி எடுத்து வர வேண்டும். மேலும் லாக் அண்ட் கீ கொண்டு வருதல் வேண்டும்.

15. போட்டிகள் அனைத்தும் சரியாக காலை 7:00 மணிக்கு தொடங்கப்படும்.

16. நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

17. போட்டி நடைபெறும் நாட்களில் தங்கும் இடங்களில் எந்த ஒரு இடையூறும் ஏற்படுத்தாமல் ஒத்துழைப்பு நல்கிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

18. மாணவிகளுக்கும் 27.01.2025 அன்று இரவு 9.00 மணி வரையும் மற்றும் மாணவர்களுக்கு 29.01.2025 அன்று இரவு 9.00 மணி வரை மட்டும்மே எடை போடப்படும்-எனவே அனைவரும் இரவு 9.00 மணிக்குள் வருகை தருமாறு அணி மேலாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பு;- 1.தங்கள் மாவட்டத்தில் இருந்து வரும் அணி மேலாளர்கள் அந்த அந்த பிரிவு மாணவ/மாணவியர்கள் அனைவரையும் பதிவு மற்றும் எடை போட அழைத்து வருமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அதன் பிறகு தங்கும் இடத்திற்கு மாணவ/மாணவியர் அழைத்து செல்லபடுவார்கள்

2. போட்டி நடைபெறும் இடம் மதுரையிருந்து 29 கி.மீ தொலைவில் உள்ளது. மதுரை மார்க்கமாக போட்டி நடைபெறும் இடத்திற்கு அதிகமான போக்குவரத்து வசதிகள் உள்ளது.

போட்டி நடைபெறும் இடம் ;-

பாண்டியன் சரஸ்வதி யாதவ பொறியியல் கல்லூரி-அரசனூர்.
பூவந்தி அஞ்சல்
சிவகங்கை மாவட்டம்.
பேருந்து நிறுத்தம்: பாண்டியன் சரஸ்வதி யாதவ பொறியியல் கல்லூரி-அரசனூர்.

போக்குவரத்து பொருப்பாளர்கள்:-

| | | | |
|---|---|---|---|
| வைரமுத்து | உ.க.ஆ | அரசு உயர்நிலைப்பள்ளி பூவந்தி | 9789142162 |
| கவியரசு | உ.க.ஆ | அரசு மேல்நிலைப்பள்ளி திருமாஞ்சோலை- | 7397271873 |
| விசாகராஜா | உ.க.ஆ | சோமசுந்தரம் செட்டியர் மேல்நிலைப்பள்ளி ஒக்கூர் | 8883222488 |
| சுரேஷ் | உ.க.ஆ | அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி கீழகண்டனி | 9894927297 |
| செல்வகுமார் | உ.க.ஆ | அரசு மேல்நிலைப்பள்ளி, ஏரியூர் | 9095089857 |

Scanned with OKEN Scanner